**IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE, KARUR.**

**MCOP.NO. 332 / 2020**

Deposition of PW - 1 Petitioner / Respondent solemnly affirmed by P.Saraswathi, Bench Clerk Grade-II of this court on 24.06.2024 in accordant with provisions of XLIV of 1989.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | **அன்னலட்சுமி** | Age | : | 39 |
| Husband Name | : | **சிவக்குமார்** | Village | : | **மாயனூர்** |
| Calling | : | | Taluk | : | **மாயனூர்** |

**<u>முதல் விசாரணை</u>**

நான் இந்த மனுவின் மனுதாரர் ஆவேன். எனது சாட்சியத்தை நிரூபணவாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். எனது தரப்பு சான்றாவணங்களை தாக்கல் செய்கிறேன். வழக்கு விபத்து சம்பந்தமாக மாயனூர் காவல்நிலைய குற்ற எண்.282/2019 ல் பதிவு செய்யப்பட்ட முதல்தகவல் அறிக்கை இணையதள பதிவிறக்க நகல் - **ம.சா.ஆ.1**. குற்ற இறுதியறிக்கை இணையதள பதிவிறக்க நகல் - **ம.சா.ஆ.2**. ராஜ் ஆர்த்தோ மருத்துவமனை எனக்கு வழங்கிய காயச்சான்று இணையதள பதிவிறக்க நகல் - **ம.சா.ஆ.3**. தன்மீதான குற்றத்தை 1ம் எதிர்மனுதாரர் ஒப்புக்கொண்டு அபராதம் செலுத்தியதை காட்டக்கூடிய இணைதள பதிவிறக்க நகல் - **ம.சா.ஆ.4.** 1ம் எதிர்மனுதாரரின் ஓட்டுநர் உரிமம் நகல் - **ம.சா.ஆ.5.** ராஜ் ஆர்த்தோ மருத்துவமனை எனக்கு வழங்கிய விடுவிப்புச்சான்று - **ம.சா.ஆ.6.** நான் மருத்துவம் பார்த்துக்கொண்டதற்கு ரூ.88, 430/- செலவழித்ததை காட்டக்கூடிய ரசீதுகள் - **ம.சா.ஆ.7** வரிசை. என்னுடைய அடையாளம் மற்றும் முகவரியைக் காட்டக்கூடிய ஆதார் அடையாள அட்டை நகல் - **ம.சா.ஆ 08.** வங்கிக் கணக்கு புத்தகம் முதல் பக்க நகல் - **ம.சா.ஆ.9.** மனுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**<u>2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

கால அவகாசம் கோரப்பட்டதால் ஒத்தி வைக்கப்படுகிறது.

சாட்சி கூறிய சாட்சியத்தை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சுசெய்யப்பட்டு, பின்னர் சாட்சியிடம் படித்துக் காட்டி சரியாக உள்ளது என்று ஒப்புக் கொண்டு சாட்சியால் கையெழுத்திடப்பட்டது.

(ஓம்.சி.சொர்ணகுமார்)
தலைமை குற்றவியல் நடுவர்,
கரூர்.